**பொலன்னறுவை பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்கள் 2019 மே 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூலை 04 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 03 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொலன்னறுவை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | களஞ்சியப் பொருட்கள் தொடர்பான முற்பணக் கணக்கு முறைமை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | களஞ்சியப் பொருட்கள் தொடர்பான முற்பணக் கணக்கு முறைமை பின்பற்றப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ii) | கணக்காய்வு கட்டணங்கள், நீதிமன்ற தண்டப்பணங்கள், முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் ஏனைய செலவினங்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பொலன்னறுவை பிரதேச சபைக்குரிய 12 காணி மற்றும் கட்டிட உருப்படிகளின் பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிட உருப்படிகள் இனைத்தினதும் பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | பெறுமதியை இனங்காணுவதற்காக விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ii) | பொலன்னறுவை பிரதேச சபையில் ஆரம்ப நிலுவை நீதிமன்ற தண்டப்பண மீதி ரூபா 1,213,623 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆரம்ப மீதியை சரியாக கணக்கு வைக்க வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | 2018 ஆம் ஆண்டின் போது ஏப்ரல் முதல் யூலை வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,121,499 ஆன நீதிமன்ற தண்டப்பண வருமானம் கணிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | காலப்பகுதிக்குரிய சரியான வருமானம் கணக்கு வைக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iv) | 2018 மார்ச் 19 ஆந் திகதிக்கு முன்னர் தம்மன்கடுவ பிரதேச சபையில் காணப்பட்ட நிலுவை நீதிமன்ற தண்டப்பணங்களின் பொலன்னறுவை மாநகர சபைக்கு ரூபா 5,970,691 ஆன தொகை கிடைத்திருந்த போதிலும், அதில் பொலன்னறுவை பிரதேச சபைக்குரிய ரூபா 1,351,764 ஆன தொகை இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய தொகை உரிய முறையில் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (v) | 2018 ஆம் ஆண்டிற்குரிய பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் | பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் | இனங்காணப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிராமை. | இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டியமை. | |
| (vi) | ஆரம்ப கடன் கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 189,927 தொகைக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது செலவின விடயம் வரவு வைக்கப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகள் கடன் பட்டோர் கணக்கில் பதிவு செய்யப்பட வேண்டும். | திருத்தப்பட்டுள்ளது. |
| (vii) | பொலன்னறுவை மாநகர சபைக்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 2,512,622 ஆன முற்பணத் தொகை பொறுப்புகளாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய முறையில் பொறுப்புகள் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். |
| (vii) | மோட்டார் கிரேடர் இயந்திரத்தினை சேவையில் ஈடுபடுத்துவதற்குரிய நிலுவை வருமானம் ரூபா 30,800 தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானங்கள் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (இ) | இணக்கம் செய்யப்படாத கணக்குகள் | | |
| (i) | கலிபவுசர் வருமானப் பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வு காலப்பகுதிக்குரிய வருமானம் ரூபா 72,025 ஆக இருந்ததுடன், சேவை கோரிக்கை விண்ணப்ப கோவையின் பிரகாரம் கணிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 155,842 ஆகும். | வருமானப் பதிவேடுகள் மற்றும் கோவைகள் நாளதுவரையாக பேணிச் செல்லப்பட வேண்டும். | பதிவேடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொது நிதியத்தின் மீதி ரூபா 6,183,172 ஆன போதிலும், பி.ச.10 இன் பிரகாரம் அது | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி பி.ச.10 இற்கு சமானக இருத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இணக்கமின்மைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| ரூபா 9,994,020 ஆனமையால் ரூபா 3,810,848 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது. | | |

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் கைத்தொழில கடன்பட்டோர் மற்றும் கைத்தொழில் கடன் கொடுத்தோராக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,709,849 பெறுமதியான 10 மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(உ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| | | | |
|---|---|---|---|
| (i) | உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 105,578,938 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பெறுமதிகளை உறுதிப்படுத்தி சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டியமை. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதிக் கோவை | | | |
| (i) | 59 ஆம் விதி | ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும், பிரதேசத்தினுள் மதிப்பாய்வென்றினை மேற்கொண்டு கைத்தொழில்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கைத்தொழில்கள் தொடர்பான மதிப்பாய்வென்றினை மேற்கொண்டு பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ii) | 203 மற்றும் 204 ஆம் விதி | சபையின் ஆதனங்கள் தொடர்பான முழுமையான மதிப்பாய்வொன்றினை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்கள் தொடர்பான முழுமையான மதிப்பாய்வொன்றினை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி.571, 572 | வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை கடந்த ரூபா 280,544 பெறுமதியான 26 கைத்தொழில் வைப்பு மீதிகள் தொடர்பில நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி. பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | நி.பி.1646 | அனைத்து வாகனங்களினதும் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புகள் கணக்காய்வாளர் | ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புகள் கணக்காய்வாளர் தலைமை | சில வாகனங்களின் அனுப்பப்பட்டுள்ளதுடன், எஞ்சிய வாகனங்களினதும் ஓட்ட குறிப்புகளை அனுப்ப நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எடுக்கின்றேன். |
| (இ) ஏனைய சுற்றறிக்கைகள் | | | |
| (i) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏ/ஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பிலான தனியானதொரு சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பிலான தனியானதொரு சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 மார்ச் 20 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,532,568 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,402,059 | 957,857 | 802,790 | 1,885,648 |
| வாடகை | 224,776 | 266,958 | 266,958 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 500,000 | 184,090 | 437,855 | - |
| ஏனைய வருமானம் | 1,412,650 | - | 1,624,569 | - |
| மொத்தம் | 3,539,485 | 1,408,905 | 3,132,172 | 1,885,648 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | கணங்கொல்ல பிரதேசத்தில் வீதவரி விதிக்கப்பட்ட 241 அலகுகளிடையே 171 அலகுகளிலிருந்து எவ்வித வீதவரிக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி செய்த பிரதேசங்களிலிருந்து வீத வரி அறவிடுவதற்கு நடடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், விதவரி அறவிடப்படும் பிரதேசங்களுக்காக போதியளவான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)** | **நீர் வரி** | | |
| | தமன்கடுவ பிரதேச சபை சொத்துக்களை பகிர்ந்தளிப்பு செய்யும் போது பொலன்னறுவை பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்ட நிலுவை நீர் வரிகள் ரூபா 347,132 இல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நீர் கட்டணங்கள் ரூபா 197,407 ஆகும். | நிலுவை வருமானங்களை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது நிலுவையில் 50 சதவீதம் அறவிடப்பட்டுள்ளது. |
| **(இ)** | **கடை வாடகை** | | |
| | பொலன்னறுவை பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த சேவாகமயில் அமைந்துள்ள 10 கடைகள் இற்று வீழ்ந்திருந்தமையால் சபைக்கு கடை வாடகையை அறவிட முடியாதிருந்தது. | கடைகளை புதுப்பித்து பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த இடத்தில் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| **(ஈ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்** | | |
| | அதிகாரப்பிரதேசத்தினுள், தாபிக்கப்பட்டிருந்த 09 தொலைபேசிக் கோபுரங்களின் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானங்களை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **செயல்நடவடிக்கை திட்டம்** | | |
| | விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த 52 பணிகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் நிறைவேற்ற உத்தேசித்துள்ள பணிகளுக்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | உப விதிகளில் உரிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள் காணப்படவில்லை. செயல்நடவடிக்கைத் திட்டமொன்று உள்ளது. |
| **(ஆ)** | **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்** | | |
| (i) | ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் சபை அறிந்திருந்த போதிலும், அந்த நோக்கங்களிடையே சபைக்குரிய நோக்கங்கள் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்கின்றேன். |
| (ii) | பாதீட்டினை தயாரிக்கும் போது தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய BD/CBD/4/1/2-2018 சுற்றறிக்கையில் அஅறிமுகப்படுத்தப்பட்டிருந்த குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறையொன்று காணப்படவில்லை. | உரிய முறையில் தரவுகள் சேகரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்கின்றேன். |
| (iii) | இலக்குகளை அண்மிக்கும் போது உரிய பணிகளை கண்காணிப்பதற்கான அடைவுகள் இனங்காணப்பட்டிராதமையால், குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறையொன்று | கண்காணிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியமை. | எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படவில்லை. | | |
| (iv) | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியமை. | எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்கின்றேன். |
| (v) | இலக்குகளை அண்மிப்பதற்காக நிறுவனத்தின் பதவியணியை பயிற்றுவிக்கும் நடைமுறையொன்று காணப்படாமையால், நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் தொடர்புகொள்ள வேண்டிய ஏனைய அரச நிறுவனங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

### (அ) பதவியணி வெற்றிடங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பொலன்னறுவை பிரதேச சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 20 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவி வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டியமை. | வெற்றிடங்களை நிரப்புமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 20 மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் சபைக்கு சொந்தமாக காணப்படுகின்ற போதிலும், அவற்றின் சேவைப்படுத்தலுக்காக 04 சாரதிகளே உள்ளனர். | பதவி வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டியமை. | வெற்றிடங்களை நிரப்புமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக 2019 மே 30 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டன. | நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | மார்ச் 30 அந் திகதி வரையிலும் பொறுப்புகள் கையளிக்கப்பட்ட அறிக்கைகள் கிடைத்திருக்காமை காரணமாக தாமதமாகியது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வட மத்திய பிரதான செயலாளரின் என்சீபீ/சீஏ/01 ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் 2016 மே 11 ஆந் திகதிய கடித்தின் மூலம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது ஒவ்வொரு 02 மாதங்களுக்கு ஒரு தடவையும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |